பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

28 08 2026 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மாறிவரும் உலக சூழலுக்கு ஏற்ப ராணுவத்தை இந்தியா நவீனமயமாக்கி வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

2. இந்தியா உற்பத்தி, புதுமை மற்றும் ஏற்றுமதிக்கான உலகளாவிய மையமாக வேகமாக உருவெடுத்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை பாதுகாப்பாக மீட்கும் பணியை ஒருங்கிணைக்க தமிழக அமைச்சர்கள் குழு தில்லி விரைந்துள்ளது.

4. தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

5. புடாபெஸ்ட் ஸ்குவாஷ் ஓபன் இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மாறிவரும் உலக சூழலுக்கு ஏற்ப ராணுவத்தை இந்தியா நவீனமயமாக்கி வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் ஜபல்பூரில் T-72, T-90 ரக பீரங்கிகளை பழுது பார்க்கும் நவீன மையத்திற்கு நேற்று அடிக்கல் நாட்டிப் பேசிய அவர், நவீன போர்க்களச் சூழலுக்கு ஏற்ப இந்தியா தனது ராணுவக் கட்டமைப்பை வலுப்படுத்தி வருவதாக கூறினார்.

துல்லியமான ஏவுகணைகள், ட்ரோன்கள், செயற்கைக்கோள்கள், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் போர்முறை போன்ற நவீன தொழில்நுட்பங்கள் வந்திருந்தாலும் பீரங்கிகளின் தேவை இன்னும் குறைந்துவிடவில்லை என்று கூறினார்.

சவாலான நிரப்பரப்புகளில் பாதுகாப்பாக செயல்பட ராணுவத்திற்கு பீரங்கிகள் தேவை என்றும் அவர் கூறினார்.

ஏவுகணைகள், பீரங்கிகள், ட்ரோன்கள் என அனைத்து வசதிகளையும் ஒருங்கிணைத்து பயன்படுத்துவதே நாட்டின தற்காப்புக் கொள்கையாக உள்ளது என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<>>>>

இந்தியா உற்பத்தி, புதுமை மற்றும் ஏற்றுமதிக்கான உலகளாவிய மையமாக வேகமாக உருவெடுத்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கனடாவில் அரசு முறைபயணம் மேற்கொண்டுள்ள அவர் நாட்டின் வளர்ந்து வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, உள்நாடு மற்றும் சர்வதேச சந்தைகளில் முதலீடு செய்ய முன்வருமாறு அந்நாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

சீர்திருத்தங்கள், டிஜிட்டல்மயமாக்கல், உள்கட்டமைப்பு முதலீடுகள் மற்றும் இலக்கு சார்ந்த கொள்கை ஆகியவை இந்தியாவில் நீண்டகால முதலீட்டுச் சூழலைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் உள்ள பன்னாட்டு நிதித் தொழில்நுட்ப நகரிலும் பன்னாட்டு நிதிச் சேவைகள் மையத்திலும் கனடா நிறுவனங்களுக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2030ஆம் ஆண்டுக்குள் இருதரப்பு வர்த்தகத்தை 70 பில்லியன் டாலராக உயர்த்தும் லட்சியத்துடன், முதலீடு, தொழில்நுட்பம், புதுமை மற்றும் நிதிச் சேவைகள் போன்ற துறைகளிலும் ஒத்துழைப்பை விரிவுபடுத்த வேண்டும் என்று கனடா தொழில் நிறுவனங்களிடம் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தினார்.

<<<<>>>>

நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை பாதுகாப்பாக மீட்டு கொண்டுவர தமிழக அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதற்கான பணிகளை ஒருங்கிணைப்பதற்காக மூத்த அமைச்சர்கள், திரு. ஆதவ் அர்ஜுனா, திரு. ராஜ்மோகன், திரு. வினோத், திரு. தென்னரசு ஆகாயர் நேற்றிவு சென்னையில் இருந்து தில்லி புறப்பட்டுச் சென்றனர்.

நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்கவும், நிவாரணப் பணிகளை கண்காணிக்கவும் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆஷிஷ் குமார் தலைமையிலான குழுவை காத்மாண்டுவுக்கு அனுப்ப முதலமைச்சர் திரு. விஜய் உத்தரவிட்டுள்ளார்.

<<<<>>>>

கிராமப்புறங்களில் குடிநீர்ப் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களுக்கு மத்திய நீர்வளத்துறை அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளில் குடிநீர் மற்றும் தூய்மை இந்தியா இரண்டாம் கட்டத் திட்டத்தையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவது, குடிநீர் ஆதாராங்களை புணரமைப்பது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளுமாறும் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

கிராப்புறங்களில் குடிநீர் மற்றும் சுகாதாரம் சார்ந்த திட்டங்கைள கிராம வளர்ச்சித் திட்டங்களுடன் தொழில்நுட்ப ரீதியாக இணைத்து செயல்படுத்த வேண்டும் என்றும் நீர்வளத்துறை மாநில மற்றும் யூனியன்பிரதேச அரசுகளை வலியுறுத்தியுள்ளது.

<<<<>>>>

நீர்வளத்துறை தொடர்பான 42 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளை மேற்கொள்ள மாநில அரசு கோரியுள்ள ஒப்பந்த புள்ளியில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இந்த முறைகேடுகளை ஆய்வு செய்து ஆன்லைன் ஒப்பந்தப் புள்ளி ஆவணங்களை முதலமைச்சர் திரு. விஜய் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

பருவமழை முன்னெச்சரிக்கை பணிகளுக்காக நீர்வளத்துறை ஒதுக்கியுள்ள 42 கோடி ரூபாய் மதிப்பிலான 202 பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் குறுகிய கால

அவகாசத்தில் வழங்கப்பட்டிருப்பது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

10 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு 2 நாட்கள் மட்டுமே கால அவகாசம் வழங்கியது ஏன் என்றும், இந்த ஒப்பந்தப் புள்ளியை ரத்து செய்து மறுஒப்பந்தப் புள்ளிகள் கோர வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

**<<<<>>>>**

சென்னையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியை வெற்றிகரமாக நிறைவு செய்ய பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று மாநகராட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

கணக்கெடுப்பில் தங்களது குடும்பம் விடுபட்டிருந்தால் மண்டல வாரியாக மாநகராட்சி அறிவித்துள்ள தொலைபேசி எண்களில் பொறுப்பு அலுவலரை தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்கு தேவையான தகவல்களை பொதுமக்கள் வழங்க வேண்டும் என்றும் மாநகராட்சி அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை மற்றும் இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடியமிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

புடாபெஸ்ட் ஸ்குவாஷ் ஓபன் இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் சக நாட்டு வீரரான Veer Chotrani-யை 3-2 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.

இன்று இரவு நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் வேலவன் செந்தில் குமார் - ஹங்கேரி நாட்டின் Balazs Farkas-ஐ எதிர்கொள்ள உள்ளார்.

----------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் மதுரை அணி இன்று கோவை அணியை எதிர்கொள்ள உள்ளது.

சென்னையில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

--------------

உலக கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா - ஜெர்மனியை வென்று 5வது இடத்தைப் பிடித்துள்ளது.

நேற்று நெதர்லாந்தின் Amstelveen-ல் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா 3-1 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வென்றது.

போட்டித் தரவரிசையில் முன்னணியில் உள்ள ஜெர்மனியை, இந்தியா தோற்கடித்திருப்பது வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

1974ஆம் ஆண்டு, முதல் உலகக் கோப்பை போட்டியில் 4வது இடத்தைப் பிடித்த பிறகு கடந்த 52 ஆண்டுகளில் இந்தியா மிகச் சிறந்த வெற்றியைப் பதிவு செய்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

**<<<<>>>>**